உ

திருச்சிற்றம்பலம்.

கானூரென வழங்கும்

இராஜமணிபுரத்தில் திருக்கோவில் கொண்டெழுந்
தருளியிருக்கும்.

# ஸ்ரீ தண்டாயுதபாணி

# ஆசிரிய விருத்தம்

இஃது

பில்லுவலசை யெனவழங்கும் ஆண்டவராய புரத்திலிருக்கும்

பிர்ம்மஸ்ரீ சீநிவாஸையரவர்கள் குமாரர்

**ஆத்மநாதையரவர்களால்**

இயற்றப்பெற்று

இராமநாதபுரம் சமஸ்தான வித்வானும் மன்னார்குடி ப்பிண்டலே
காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய

**சர்க்கரை இராமசாமிப் புலவரால்**

பதிப்பிக்கப் பெற்றது.

...ted at the "BHARATI PRESS,"

...ANNARGUDI.

[1-3-1913.]

MADRAS
026:38.2kRA
N13
180052

திருச்சிற்றம்பலம்.

MADRAS



கானூர் ஸ்ரீ தண்டாயுதக்கடவுள்

# ஆசிரிய விருத்தம்.

## காப்பு.

### கலிவிருத்தம்.

சத்தி யீசன்கைத் தாமரைத் திங்கணி
நத்து வேலவ னானற வேமனங்
பத்தி யாகப் பணிந்தவன் பாற்பெறுஞ்
சித்தி யைங்கரன் சீரடி போற்றுவாம்

எயிலு கந்தவ ணேறி யிலங்குவான்
மயிலு கந்த மலைக்குடி மேவுவா
னயிலு கந்த வறுமுகற் கண்ணனும்
வெயிலு கந்த விநாயகற் போற்றுவாம் (உ)

## சரஸ்வதி துதி.

வேறு.

அலைகடற் புவியெலா மாக்கு நான்முக
னலையிலை மானிட ரெழின்மெய் யென்னவந்
நிலையதே தோணியென நிகழ்த்தி வெற்றிகொள்
கலைமக ளிருபதங் கருத்தி ருத்துவாம் (௩)

## ஆத்மநாதர் துதி.

புயறவழ் சிகரக் கயிலைநின் றிழிந்து
புண்ணியப் பெருந்துறை யுறைவான்
கயவுரி தரித்தோன் காலனை யுதைத்தோன்
களமமு தாக்கியுட் கொண்டோன்
செயமுறு நகையாற் றிரிபுர மெரித்தோன்
சிந்தனை செய்யுமெய் யடியார்
அயமெனு மனதை யனலிமு தாக்கு
மாளுடை யான்பதம் பணிவாம் (௪)

## யோகநாயகி துதி.

கலிநிலைத்துறை.

மோக நாயகன் மலரயன் மாலினுங் காணா
வேக னாகிய பரம்பொரு ளிதயமு மிடனா
பாக முந்தனைப் பணிபவ ருள்ளமு மகலா
யோக நாயகி யுபயபா தம்பணி யுனாமே (௫)

## அவையடக்கம்.

நேரிசை வெண்பா.

ஆய்ந்தபுரா ணங்களிலொன் றானியகாத் தப்பொருளை
வாய்ந்ததுதி யாயான் வழுத்துவது—வாய்ந்தகவி
கண்மலையைக் கொண்டுகரை கட்டவதிற் கண்டவணில்
சின்மணலைக் கொண்டிறைத்த தே.

## நூல்.

ஆதிகயி லைக்கிரியி லம்மையுமை யோடா
னமர்ந்தநா ளமரர்கோமா
னரிய துயர் தீர்த்தருள வாறனற் பொறிதர
வழற்கடவு டாங்கியேகிச்
சோதிபெறு மப்பொறி கனற்றலாற் சரவணத்
தோயமதி லேதவிர்க்கச்
சுந்தர மிருந்தவறு மைந்தருரு வாய்மலரைத்
தூமலர்த் தொட்டிலாடி
மாதர்திலகம்போன்ற கார்த்திகைப் பெண்களறு
மடியிருந் தமுதமுண்டு
மலையரைய னருள்குமரி கையா லெடுக்கவொரு
மைந்தனுரு வானகந்தா
காதவழி தூரங் கமழ்ந்துவளர் தருபொழிற்
கானூ ரமர்ந்தகுகனே
கண்டுபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (க)

மதியைப் பழித்தமுக மதனிற் றிருக்கமல
மலரைப் பழித்தவிழியும்
வரிவிற் பழித்தவிரு புருவத் தமர்ந்தநுதல்
வள்ளைப் பழித்தசெவியுஞ்
சுதையைப் பழித்தமொழி மதனைப் பழித்தவெழில்
சொன்னம் பழித்தநிறமுந்
தூயதர ளத்தைப் பழித்திடுந் தந்தமுஞ்
சுரிவளையை யிகழ்கண்டமு
நிதியைக் கொடுக்குமைந் தருவைப் பழித்தபன்
னிருகொடைக் கரமுமடியார்
நெஞ்சத் தடத்துமலர் கஞ்சத் திருப்பதமு
நேரில்யான் காண்பதென்றோ
கதிரைப் பழித்தமணி களையுற்ற மாடமலி
கானூ ரமர்ந்தகுகனே

கண்டுபணி தொண்டர்பிணி வீண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (௨)

அண்டகோ ளங்களைச் செண்டா யெடுத்துவிளை
யாடித் திரிந்துமாகத்
தம்புலி திவாகரரை யம்புய மலர்க்கைகொ
டணைத்துப்பின் மாறிவைத்துந்
தண்டரள மாலையென மண்டொளி விரித்துநிறை
தாரகா கணமுதிர்த்துந்
தந்தரா லேந்துமா தங்கமுத லாமொருத்
தலையொரு கையாற்றூக்கியு
மண்டல மதிக்கவளர் மந்தரத் தேறியுயர்
மாமேரு விற்றூவியு
மன்னுநீர்க் கங்கைநதி மூழ்கியவ் வழியே
மகோததியி லேயெழுந்துங்
கண்டகர் மனத்தையுங் கவர்திரு வுருக்கொண்டு
காணு ரமர்க்குகந்தனே
கண்டுபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (௩)

மத்தகஜ முகவாகு வாகனற் கநுசனாய்
மாதுமைக் கிளைய சுதனாய்
மாதவனன் மருகனாய் மாதவர்க் கரனாய்
மகாதேவ னிருகண்மணியா
யெத்திசைக ளும்பணியு மத்தனாய் வேல்கரத்
தேந்தியடி யவரையோம்பு
மெந்தையே மண்பொதுத் தந்தையைச் சிறையில்வைத்
திவ்வுலக மெல்லாம்படைத்
தத்தன்விடு முத்தர வகற்றலா னுளமகிழ்ந்
தருகில்வர வும்பிரணவத்
தரியபொரு ளவனறிய விரியுமறை நெறிவழா
தருளிய குமாரகுருவே

கத்துகட லொத்தமுழ வெத்திசையு மார்த்திடுங்
கானா ரமர்ந்தகுகனே
கண்டேபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (௪)

வானவர்க டற்சூழ வாசவனு நான்முகனும்
வணசநா பனுமுந்தைநாள்
வந்துதுதி செய்துவெஞ் சூரனுற் றும்பட்ட
வாதைக ளனைத்துமோதிப்
போனபத மீளப் புரக்கவருள் பன்னிரு
புயாசலா வெனவணங்கப்
புன்னகை யுடன்பல மொழிந்துநீ ரஞ்சலீர்
போய்வருக வென்றுகூறி
யூனெழுரு சத்திவே லுமையவ டரப்பெற்
றுயர்ந்தவீர தத்தேறியன்
புற்றபரி சனவீரர் கணமெலாஞ் சுற்றிவர
வோகையுட னேகுநாளிற்
கானக மெனக்கனற் காடுபொலி தருவயற்
கானா ரமர்ந்தகுகனே
கண்டேபணி தொண்டர் பிணி விண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (௫)

தாரகையி னிடைமருவு தண்மதி யெனச்சென்று
தன்னைநிகர் சூரபதுமன்
தம்பியா யுலகதி சயிக்கவஞ் சனைசெய்து
தங்குகிர வுஞ்சமேவி
நாரணன் மகாநேமி யைத்தொடை யெனக்கொண்ட
நஞ்சனைய தாரகனெனு
நாமமுறு மம்மலையி னுமமற வானகமு
நானிலமு மேத்த விசைசால்
வீரவா குப்பெயர்கொள் வள்ளலுமம் மாயையை
விலக்கிவர மாசுபோக்கும்

வேதமறை யாசிபல மாதவரியம்பவடி
வேல்கரத் தேந்து முருகா
காரளி யுகுத்ததேன் கரைபொரு மலர்ப்பொழிற்
கானூ ரமர்ந்தகுகனே
கண்டுபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (௬)

தொண்டர்கண மானசிக மாய்த்தினம் போற்றிநற்
றூயபத மடையுமல்லார்
தொல்லுலகி லவைமெச்ச வாற்றிடும் பூசையாற்
றுய்த்திடார் பேரின்பமென்
றண்டர்கண நின்பூசை யாற்றுதற் கெண்ணியுய
ராலயம் வகுத்தாகமத்
தறையும்விதி யைத்தழுவி வழிபா டியற்றல்சொல
வாதிசே டற்கியலுமோ
விண்டலத் தவர்சிறையை மீட்டிவரு வாயெனமுன்
வீரவா குவையொற்றனாய்
விட்டுமுள மஞ்சா தெதிர்த்துவரு மசுரேசன்
வீழவிடு வேல்கொண்டுகெற்
கண்டனைய வின்சொற் கனிந்தமனை களையொரீஇக்
கானூ ரமர்ந்தகுகனே
கண்டுபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (௭)

தேவருல காளிபெறு செல்வச் சயந்தனைத்
திகிலடையு மமரர்குழுவைத்
தெண்டித் தருஞ்சிறை யடைத்தவனை யிரவியைச்
சிறுவயதி லேகொணர்ந்து
மேவிவளர் தொட்டிலிற் கட்டிய பலத்தினால்
வெற்றிபெறு பனுகோப
வெய்யவனை யார்ப்பரித் தமரா டிவந்தவழி
மீண்டிடா வகைமாய்த்திடுஞ்

சேவகம் பெறுவீர வாகுமுத லொன்பதின்மர்
சேனைநா யகரிலக்கர்
சேர்ந்தபடை யொடுசென்று சிங்கமுக வசுரனைச்
சேதித்த வடிவேலவா
காவலரு மாவலொடு மேவுமெழி லோவாத
கானூ ரமர்ந்தகுகனே
கண்டுபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (௮)

கற்பநூற் றெட்டா யிரத்தண்ட முழுவதுங்
காத்திட வரங்கள்பெற்றுக்
கனலியம னிருதிகால் வருணன்வட திசையினைக்
காவல்புரி தனதன்முதலோர்
நற்பத மிழந்தகிர கங்களொடு குற்றேவ
னாடொறுஞ் செய்துண்மெலிய
நலிசூர னதிவீர பந்துவர்க் கத்தோடு
நாசமுற வேல்விடுத்து
முற்பல நிகர்த்தமா மயிலும்வா ரணமுமா
யோடுமெச் சூரனையுவந்
தூர்திகொடி யாக்கியத் தேவர்துயர் போக்கியா
முறுகவலை நீக்கியென் றுங்
கற்பகத ருக்கணிழ லிற்புலவர் வந்துபணி
கானூ ரமர்ந்தகுகனே
கண்டுபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (௯)

நாரதா தியமுனிவர் கருடர்கந் தருவர்கின்
னரர்வித்தி யாதரர்குரு
நாதனிரு பாதமல ரேதுகதி யென்றென்ன
நாண்மல ரணிந்திறைஞ்ச
வேர்பெருகு செந்திலி லிருந்துரக வீரர்முத
லெண்ணரிய படைபுடையரா

180052

தெய்தப் பரங்குன் றினுக்கிறைவ னாயமர்ந்
    தெவ்வுலகு நோக்கிமகிழ
வார்பொருவு மலைமேவு தெய்வக் களிற்றினை
    மணந்தெழுந் தருளியன்பால்
வந்தனை புரிந்திட்ட விந்த்ராதி தேவர்க்கு
    வாழ்பத மளித்தகுமரா
கார்முகில் படிந்தமதி லேர்பெற வமைந்திலகு
    கானூ ரமர்ந்தகுகனே
கண்டுபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
    களிக்கவரு முருகேசனே (௰)

குஞ்சரி யுடன்பரங் குன்றின் பரப்பெலாங்
    கூடிவிளை யாடுநாளிற்
குவலயஞ் சுற்றிவரு நாரத மஹாமுனி
    குகாவென விறைஞ்சி யேத்தி
மஞ்சுதுயில் சிற்றூரி னம்பியர சன்பெற்ற
    மகளென்ன வளருநங்கை
மலர்மேவு மடமாத ரிருவரையும் வென்றவெழில்
    வாய்த்தகுற மாதுவள்ளி
வஞ்சியை மணந்திடுக வள்ளலே யென்னவரு
    மாறிநரை திரைமூப்புமேல்
வந்தமறை வாணனாய் வந்துமத தந்திமுகம்
    வாய்த்தமுன் னோனுதவியால்
கஞ்சனு குதிசெயத்த ணிகையின் மணஞ்செய்து
    கானூ ரமர்ந்தகுகனே
கண்டுபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
    களிக்கவரு முருகேசனே (௰௧)

தென்னவ னெனப்பெறுஞ் சிவபிரா னுறையுந்
    திருப்பெருந் துறையினுக்குஞ்
செய்யபுனல் வாயிற் றலத்துக்கு மத்தியாய்த்
    திருவாழ் பெருங்குடியையோர்

மன்னமரடக்கிளையத் தெற்குமேற் குள்ளதாய்
  வளமருமவு பரிவீரமா
மங்கலத் தைக்கிழக் காய்வைத்த தாய்க்குமூஉ
  வன்றுறு பாய்வளமதாய்
முந்நீரத் தடத்துமத வாரண முழக்கலான்
  முதிர்வாலை பாய்ந்துதெங்கின்
முப்புடைக் கனியுதிர்த் தொப்பிலாக் கமுகினொடு
  முட்புறக்கனிலையவீழ்த்திக்
கன்னலொடி யக்குலைக் கதலிசாய் வளமேவு
  கானூ ரமர்ந்தகுகனே
கண்பெணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
  களிக்கவரு முருகேசனே (௰௨)

சீர்கொண்ட வகிலாண்ட கோடிகளை யீன்றமொரு
  சிறபெண்வடி வாகியீசன்
சித்தக் களிப்பினுக் கொத்தபரி பூரண
  சிதாநந்த சத்திதனையா
தார்கொண்ட வள்ளிகுஞ் சரிநாத னேபெருந்
  தாரகப் பிரமவுருவே
தானவர் குலப்பகைவ னெனவடி வேலவா
  தற்பரா நந்தநிதியே
நீர்கொண்ட சரவணத் தேர்கொண்ட பூந்தவி
  சிருந்துவிளை யாடல்போலென்
னெஞ்சத் தடத்தின்மலர் கஞ்சத் தெழுந்தருளி
  நேயமுடைத் தாட்கொள்ளுவாய்
கார்கொண்ட திருமேனி மாண்மருக செல்வமலி
  கானூ ரமர்ந்தகுகனே
கண்பெணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
  களிக்கவரு முருகேசனே (௰௩)

பரிதிரு முலகெலாம் பங்கய னளித்தலும்
  பார்த்தசா ரதிகாத்தலும்

யாதியுமை யமருமெய்ச் சோதிதிரை பொருபெரும்
பரவையாற் சேதித்தலுங்
கருதினத் தொழில்களை நடத்து கடவுளர்சண் மு
காவுனைய லாமலுண்டோ
கலைமாது தன்பதங் களையின்றெஞ் சடியார்
களைப்புரந் தருள்காட்சியு
மருவுசெங் தாமரையில் வாழ்மங்கை யலகில்செல்
வங்களை யளித்தலுமுனை
வணங்குகீழ்க் குடியாரை மேற்குடிய ராய்வைக்கும்
வடிவேலி னுனையலவோ
கருதாம லெதிர்பொருத சூரனைப் பொடிசெய்து
கானா ரமர்ந்தகுகனே
கண்டுபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (௰௬)

நாலுவே தமுமாறு சாத்திரமு மறுபத்து
நான்குகலை ஞானங்களு
நவில்புரா ணங்களு மேற்றமாய்ப் புகலுவது
நுமங்க ளன்றியிலையே
சீலமிகு பெரியோர் மனத்துளே கண்டுபணி
சின்மயா நந்தவொளியே
சித்தசன் கனையா லுழன்றுதிரி வாரகஞ்
சேராத மயில்வாகனே
பாலபரு வம்முதற் பாடிநின் புகழே
படிக்கின்ற புலனாயினேன்
பவப்பிணி மனத்துயர் தவிர்த்துவகை யருளுவாய்
பாலசுப்பிரமணியனே
காலன்வந் தணுகாத கோலஞ் செறிந்துலவு
கானா ரமர்ந்த குகனே
கண்டுபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (௰௭)

மீனவன் புதல்வியா யுலகெலா மரசாண்ட
மீனாட்சி யம்மைசுதனாய்
மேன்மைபெறு முக்கிரப் பெருவழுதி யாயிந்த
மேதினியெலாம்புரந்தாய்
வானவர்கள் கோனையொரு வளைகொண்டு தாக்கினாய்
வடிவேலி னாற்கடலையும்
வற்றிடச் செய்தாய்மகாமேரு வைத்தலை
வணக்கினாய் செண்டொன் றினால்
தூநலச் சிட்டரைப் பரிபால னஞ்செய்து
துட்டரைச் சங்கரித்தாய்
தோகைமயி லேறிவரு குருபரா வெளியனேன்
றுயர் தவிர்த் தாள்வதரிதோ
கானவர் களுக்குமுன் வேங்கைமர மாய்நின்று
கானா ரமர்ந்தகுகனே
கண்டுபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (௰௬)

ஆதுலர் களுக்குண வளித்திலேன் பத்தருக்
கணியாடை யீந்தறிகிலே
னருந்தநீ ரீந்திலே னையங் கொடுத்திலே
னாதியை வணங்கியறியே
னீதிநெறி சென்றிலே னித்யவிதி செய்திலே
னிறையா யிருந்தறிகிலே
னேசனைக் காத்திலே னிசமே புகன்றிலே
னிறைஞானி பாலணுகிலேன்
மேதினியி னன்னீர் படிந்திலே னினதடியை
மெய்ம்மையாய்த் தொழுதறிகிலேன்
வேதமொரு நாளேனு மோதியறி யேன்சற்றும்
வெங்கோப மாற்றியறியேன்
காதகச் செயல்புரியு மடியனையு மாட்கொள்வாய்
கானா ரமர்ந்தகுகனே

Q26·58·2112
NB

கண்டபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (௰௭)

மந்தார மலர்பாரி சாதமா துளையலரி
வளர்சாதி புன்னை பூழின்
மௌவல்கா யாவெட்சி மாதவி கர்ந்தைகுட
மல்லிகை மணச்சந்தனஞ்
சிந்தூர நிம்பசண் பகபாட லங்கொன்றை
செறிபாலை வேங்கை வேழங்
நிம்பலா வீக்துதா தகிநரந் தம்மால்
சிறந்தொளிரும் விஸ்வமத்தி
குந்தங் குறிஞ்சிபுட் பந்தினங் தருபனீர்
குமிழிலவு நெல்லி தான்றி
குளிர்தளிர்ச் சூதமெழில் குலவுபனை கமுகுதெங்
குவ்வாச மலிவஞ்சிகள்
கந்தமெண் டிசைவீசு கின்றதண் டலையோங்கு
கானூ ரமர்ந்தகுகனே
கண்டபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (௰௮)

மாதத்தின் மும்மாரி பொழியவுல கெங்கணும்
வளம்பெருக முறைமைதவறு
மறையோர் மகஞ்செய்க வான்குல மிகுந்திடுக
மன்னுயி ரெலாந்தழைக்க
நீதியா யுலகோம்பு வேந்தன்வாழ் வுற்றிடுக
நிலவுக வறங்களெல்லா
நெல்லாதி தானிய நிறைந்திடுக வுயிரெலா
நிறையாயுள் பெற்றுமகிழ்க
பேதமில் லாதகற் புளமாதர் பதினாறு
பிள்ளைகளை யீன்றுவாழ்க
பிழையின்றி முப்போது நாற்போதி னுலனைப்
பேணுமடி யாரோங்கசொர்க்

காதிபத மேதுமெதி ரோதுவ தனுக்கரிய
காணு ரமர்ந்தகுகனே
கண்டுபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (௰௧)

எத்தலமு மீனமா தத்திலுத் திரநாளி
லிணையினின் பெருமை யோங்கு
மென்றூலு மத்தலங் களிலாறு படைவீட்டி
லேற்றமா கும்பழனியே
யத்தலத் திலகுதெண் டாயுதத் தெய்வமா
யடியவர்கள் வாழ்த்திமகிழ
வநுதினமுமருள்புரிந் தொளிர்வேல நம்மேரு
வனையபன் னிருபுயநம
நித்தியா னந்தநம நிட்களங் காயநம
நிர்விகர்ப் பாயநமவே
நிஷ்ப்ரபஞ் சாயநம சரவண பவாயநம
நிர்ம்மல சொரூபாநம
கர்த்தனே துஷ்டசம் மர்த்தனே நமவெழுங்
காணு ரமர்ந்தகுகனே
கண்டுபணி தொண்டர்பிணி விண்டகல வெண்டிசை
களிக்கவரு முருகேசனே (௨௰)

வாழி யீசனம் மாலயன் வாழியே
வாழி கந்தன் மயிலயில் வாழியே
வாழி விண்ணவர் மண்ணவர் வாழியே
வாழி முத்தமிழ் மாதமும் மாரியே

௨

## இராகம் அடாணா

பல்லவி

மங்களஞ் செயமங்களஞ் சண்முகனுக்கு
மங்களஞ் செயமங்களம்.

சித்திவி நாயகற் குற்ற துணைவனாகிச்
சின்மய மாம்பரா சத்தி புதல்வனாகிச்
உத்தமி குஞ்சரி தன்னை மணஞ் செய்தே
யுன்னத மாம்பரங் குன்றி லமர்ந்தோனுக்கு மங்களம்

பந்த வினையைத்துஷ்டப் பாபரைக் கொன்றிடும்
பக்த சிஷ்டபரி பாலனஞ் செய்திடும்
செந்திரு மகள்வாழுஞ் சீரலை வாயென்னுஞ்
செந்திற் பதிச்சத்திவேற் கந்தக்கடவுளுக்கு மங்களம்

தாரக மாம்பிர ணவப்பொரு ளின்பயனைத்
தற்பர னானகொன்றைத் தாமற் குபதேசித்துப்
பாரகத் துறையுமன் பர்க்கருள் செயக்கானூர்ப்
பதியிற் செவ் வேல்கைக்கொண்டு வதியுங் குமரனுக்கு மங்களம்

கானகத் திற்குறக் கன்னியைக் கள்ளமாய்க்
காதலித் தேதணி கைப்பதி வாழ்வாற்கு
தீனத யாபர திவ்விய குணவாற்கு
தேவர் தினம்பணியுந் திருக்குன்றை வேலவற்கு மங்களம்

செந்தமிழ் கற்றவர்க்குச் சந்தத முந் துணையாய்த்
தீவினைப் போக்கியாத்ம நாதனுக் கருள்புரி
கந்தனுக் குப்பார்வதி மைந்தனுக் குச்செல்விவாழ்
கானூர்த் தலத்துறையுங் கதிர்வேன் முருகனுக்கு மங்களம்.

முற்றிற்று.

ஆவணக்காப்பக
18052

பாரதி பிரஸ், மன்னார்குடி.—No-639—500